## த.வெ.க. அரசின் நிதி நிலை அறிக்கையில்

# 100 ஆண்டுகள் ஆனாலும் நிறைவேற்ற முடியாத - சாத்தியமில்லாத அறிவிப்புகள்தான் உள்ளன!

## சட்டப்பேரவையில் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் - கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் பேச்சு!

**சென்னை, செப்.10-**

**சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு. ராஜேந்திரன், "த. வெ.க. அரசின் நிதி நிலை அறிக்கையில், 100 ஆண்டுகள் ஆனாலும் நிறைவேற்ற முடியாத - சாத்தியமில்லாத அறிவிப்புகள்தான் இடம் பெற்றுள்ளன !" என்று அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

2026-2027 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

900 ஆண்டுகள் பழமை வாய்ந்த கடகாலீஸ்வரர் ஆலயம் அமையப்பெற்றதால் கடையநல்லூர் எனப் பெயர் பெற்று விளங்குகின்ற எனது தொகுதியின் தலைநகர் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் மிகப்பெரிய பள்ளிவாசல் அமையப்பெற்றிருக்கின்ற பெருமையைப் பெற்றதன்மூலம் சமய ஒற்றுமைக்குச் சான்றாக விளங்குகின்ற எனது கடையநல்லூர் தொகுதியில் ஓர் உறுப்பினராக நின்று, வரலாற்றுப் பெருமைக்குரிய இந்த மன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற அன்பின் வடிவங்களான கடையநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை."**

என்கிறார் வள்ளுவர். பெற்ற தாய் பசியோடு இருக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. சான்றோர்களின் பழியை ஏற்கும் நிலையை ஏற்படுத்தி விடாதே என்பது பொதுவாழ்வில் இருக்கின்ற நம் ஒவ்வொருவருக்கும் வள்ளுவர் வகுத்துத் தந்திருக்கின்ற நீதியாகும். அரசியல் ஞானம் கொண்ட, நாள்தோறும் பத்திரிகை படிக்கின்ற, தொலைக்காட்சி செய்திகளைக் காண்கின்ற, வயது முதிர்ந்த எனது தாயார், இந்த உரையைத் தன் கிராமத்திலிருந்து ஒருவேளை கேட்டுக் கொண்டிருக்க முடியும்.

42 ஆண்டுகாலமாக பாலைவனப் பயணம் போன்ற பொதுவாழ்வை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்ட எனக்கு, பொதுவாழ்வில் சட்டமன்ற உறுப்பினருக்கு மேலான வாய்ப்புகள் கூட ஒருவேளை வழங்கப்படக்கூடும்; கிடைக்கக் கூடும். அது பெரியதா அல்லது பெற்ற தாயே உணவின்றி பட்டினி கிடந்தாலும், சான்றோரான வாக்காளர்கள் பழிக்கின்ற செயலுக்கு ஆளாகி விடாதே என்று வள்ளுவர் சொல்லுகிறாரே அது பெரியதா என்று பார்த்தால் (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளுவர் பக்கம் நிற்பதற்கு முடிவெடுப்பதுதான் சரியென்று கருதி, அந்த முடிவை மேற்கொண்டு, எனது தொகுதிக்குப் பயணப்பட்டேன். எனக்கு வாக்களித்த 80 ஆயிரம் வாக்காளர்கள் மாத்திரம் அல்ல, எனக்கு வாக்களிக்கத் தவறிய பல ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் சிறந்த முடிவை மேற்கொண்டீர்கள் என்று என்னை வாழ்த்தினார்கள். எனது whatsapp-க்கு வந்திருக்கின்ற 500-க்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகளில் உங்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோம். ஆனால், இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை நாங்கள் பெற்றதற்காக பெருமைபடுகிறோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்த whatsapp குறுஞ்செய்தியில் பலர் குறிப்பிட்டார்கள்.

தனியாக நின்று, தவிக்கின்ற நிலை ஏற்பட்ட போது, எந்த இயக்கத்தில் எனது 20 வயதில் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்ட பெருமையைப் பெற்று சிறந்தேனோ, அந்தப் பெருமைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீர்மிகு தலைவர், வெகுஜன மக்கள் போற்றுகின்ற எண்ணற்றத் திட்டங்களை, வெகுஜன மக்களுக்கு நேரடிப் பயன் தருகின்ற எண்ணற்றத் திட்டங்களை வழங்கியதால், முதல்வர்களில் முதல்வராக சிறந்து விளங்குகின்ற முதல்வர், தமது நடை, உடை, பாவனை செயல்பாடுகளால் நமது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர்தான் முதலமைச்சராக இருக்கிறாரோ என்று நினைக்கத்தக்க உணர்வை, ஒவ்வொருவரிடத்திலும் ஏற்படுத்திய முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு முகம் காட்டி, ஆற்றுப்படுத்தி, எங்களை அரவணைத்து, தம்மில் ஒருவராக ஆக்கிக் கொண்டார்.

பேரவைத் தலைவர் அவர்களே, எதிரிகள் பயன்படுத்துகின்ற பாணங்களைக் கைப்பற்றி, எதிரிகள் மீதே வீசுகின்ற போர்முறை தமிழர்கள் பின்பற்றிய பழங்கால போர் முறைகளில் ஒன்று. அந்த அடிப்படையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசியபோது, அந்த நாளை தமது நாளாக்கிக் கொண்டவர். தமிழ்நாடு அரசின் காவல் துறையின் கைது நடவடிக்கைக்கு ஆகஸ்ட் 4 ஆம் தேதி ஆளான போது, அந்த நாளையும் தனது நாளாக்கி, பழந்தமிழர் போர் முறையின் ஒரு சிறப்புக்குரியவர்தான் என்பதை நிரூபித்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களின் பேரப்பிள்ளை. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைப்பிள்ளை. நூற்றாண்டு பாரம்பரிய சிறப்புடைய திராவிட இயக்கத்தின் வீரப்பிள்ளை, எதிர்க்கட்சித் தலைவர், என்னைத் தலைவரிடம் கொண்டுபோய் சேர்த்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது நன்றி. (குறுக்கீடுகள்)

### 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி!

50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெறுவேன் என்று சொன்ன வேட்பாளரை எதிர்த்து நின்று நான் வெற்றி வாகை சூடியதற்கு எனக்குச் சிறப்பான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்ட கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அக்கா திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்து எனது வெற்றியை உறுதி செய்து தந்த அனைத்துச் செயல் மாமணிகளுக்கும் இந்த அவையில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்ஜெட் உரையில் பேசுகிறேன். நிதியமைச்சர் அவர்கள் தென்கோடி முனையில் பழந்தமிழர் பூமியான எங்கள் குமரி மாவட்டத்தின் மாப்பிள்ளை என்கிற முறையில் அவருக்கு எனது மதிப்பைப் பதிவு செய்கின்றேன். ஆனால், அவர் தன்னுடைய பட்ஜெட் உரையை வாசிக்கின்ற போது, நான் ஒரு சொற்பொழிவாளன் என்கிற முறையிலும், தமிழ் ஆர்வலன் என்கிற முறையிலும் உன்னிப்பாகக் கவனித்தேன். அவர் ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றவராக இருப்பார் என்று நினைக்கிறேன். ஆங்கில உச்சரிப்பு மிக நேர்த்தியாக இருந்தது. தமிழில் பல சொற்றொடர்களை அவர்கள் பேசாமல் விட்டுவிட்டார்கள். சில சொற்றொடர்கள் இலக்கணப் பிழையாக அமைந்தன. இதை குறையாகவோ, குற்றச்சாட்டாகவோ இந்த அவையில் நான் வைக்க விரும்பவில்லை. நமது பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தனது கட்சிக்காக வெகு சிறப்பாக வாதாடிப் பலம் சேர்க்கிறார் என்பதை நாங்கள் காண்கிறோம். நீங்கள் நமது நிதியமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் பிழையின்றி பட்ஜெட் வாசிக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருக்குமேயானால், நீங்கள் அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் 43-வது பக்கத்தில் இந்திய மருத்துவத் துறையில் தமிழ்நாடு கண்டிருக்கின்ற சாதனை பட்டியலிடப்பட்டிருக்கின்றது. அதில் ஆயிரம் பிறப்பு நேர்ந்தால் 11 இறப்புதான் இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆச்சரியப்படத்தக்க முன்னேற்றம் என்னவென்றால், 53 விழுக்காடு மகப்பேறு அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படுகிறது என்று அந்த பட்ஜெட் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது உணர்த்துகிற செய்தி யாதெனில், அன்றைக்கு கொரோனா தொற்றால் நாடே பரிதவித்துக் கொண்டிருந்தபோது இந்த அவையில் இருக்கின்ற நம்மில் பலர் எங்கே இருக்கிறோம் என்று தெரியாத நிலை இருந்தபோது, 28 மாநிலங்களைக் கொண்ட இந்திய ஒன்றியத்தில் ஒரு மாநில முதலமைச்சர்தான் கோவிட் பாதித்த நோயாளிகளை நேரடியாகச் சென்று தமது உயிருக்கு அஞ்சாமல் பார்த்துப் பயப்படாதீர்கள் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முதலமைச்சர் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லரசு உருவாக்கியத் திட்டங்களின் விளைவாகத்தான், இந்திய தேசிய சராசரியில் முன்னிலை வகிக்கின்ற மாநிலமாக இந்தியாவில் தமிழ்நாடு திகழ்கிறது என்பது உங்கள் பட்ஜெட்டிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒன்று.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்!

இரண்டாவது, பட்ஜெட் உரையின் 54-வது பக்கத்தைப் பாருங்கள். பால் உற்பத்தியில், பால் கொள்முதலில் இந்தியாவில் தலைசிறந்த முன்னணி மாநிலம் எது என்றால், அது தமிழ்நாடு என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக 90 நாட்களைக் கடந்திருக்கின்ற நீங்கள் அந்தச் சாதனையை எட்டியிருக்க முடியாது; அதை உங்கள் ஆட்சிக் காலம் முடிகின்றபோது நாம் அலசுவோம். ஆனால், அந்தச் சாதனையை இந்த மண்ணில் நடத்திக் காட்டிய பெருமை தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பட்ஜெட் உரையின் 98-வது பக்கத்திற்கு வாருங்கள். அதில் என்ன வாசகம் இருக்கிறது என்றால், மாநில சுய உதவிக் குழுக்கள் பன்னெடுங்காலமாக வளர்க்கப்பட்டு இன்று மிகப்பெரிய உச்சத்தைத் தொட்டிருக்கிறது என்று உங்கள் பட்ஜெட் பக்கம் 98-ல் இருக்கிறது. அது சொல்கிற செய்தி யாதெனில், பன்னெடுங்காலமாக உருவாகி இன்றைக்கு வளர்ந்து செழித்திருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழு என்கிற இந்த concept-ஐ, இந்த கருவை உருவாக்கி முதல் மகளிர் சுய உதவிக் குழுவை தருமபுரியில் நிர்மாணித்தவர் புத்துலகச் சிற்பி டாக்டர் கலைஞர் என்பதனை இங்கே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுகள் வாங்குகிற கடனை முறையாகத் திருப்பிச் செலுத்துகிறார்களா, திருப்பிச் செலுத்துகிற அவர்களின் அந்த திறன் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதற்கு முறையான பயிற்சி அளித்து தன்னுடைய கட்சியின் இளைஞரணிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைவிட மகளிர் சுய உதவிக்



குழுக்களுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்து, மாண்புள்ள சுய உதவிக் குழுக்களாக வளர்த்த பெருமை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும், முதலமைச்சராகவும் உயர்ந்த தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இருக்கின்ற தனிப் பெருமை என்பதைத்தான் உங்கள் பட்ஜெட்டிலே அந்த வாசகம் குறிப்பிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### கழக ஆட்சியில் 2 லட்சம் மின் இணைப்புகள்!

அன்புக்குரிய சகோதரர்களே, நமது மின்சார வாரியத்துறை அமைச்சர் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். என்னைப் போலவே நமது மின் துறை அமைச்சர் அவர்கள், சட்டத் துறையையும் கையில் வைத்திருக்கின்றவர், ஒரு வேளாண் குடியில் பிறந்தவர்தான். 23 இலட்சத்து 97 ஆயிரத்து 732 மின் இணைப்புகள் நமது நாட்டில் இலவசமாக மும்முனை மின்சாரம் வழங்குவதற்காக இருக்கிறது என பட்ஜெட்டில் இடம்பெற்றிருக்கிறது. அந்த 23 இலட்சத்து 97 ஆயிரத்து 732 மின் இணைப்புகள் சரி. கடந்த ஐந்தாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இரண்டு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதையும் சேர்த்து அந்தக் கணக்கு சரியென்று நான் வருகிறேன். உங்கள் ஆட்சியில், இந்த ஓராண்டுக்கு எத்தனை மின் இணைப்புகள் வழங்கப் போகிறீர்கள் என்ற செய்தி பொது பட்ஜெட்டிலும் இல்லை; வேளாண்மை பட்ஜெட்டிலும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை உங்களது மின்சார பட்ஜெட்டிலே குறிப்பிடக்கூடுமென நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அதிலே ஓர் உட்பிரிவாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஜனவரி மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொஞ்சப் பேருக்காவது அந்த மின் இணைப்பை வழங்கிவிடுவோம் என்கிற ஆசையில், தட்கல் முறையில் விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்கலாமென்று முடிவெடுத்து ஓர் அறிவிப்பைச் செய்தது. பிப்ரவரி மாதமே நம்முடைய தேர்தல் பணிகள் தொடங்கிவிட்ட காரணத்தினால், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்து ஜூன் மாதத்தில் அதை வழங்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய், தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சி நடந்துக்கொண்டிருக்கிறது.

ஓர் ஏழ்மையான சிறு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் என்கிற முறையில் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மின்துறை அமைச்சருக்கும் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். 67,000 பேர், காதில், கழுத்தில் அணிந்திருந்த சின்னஞ்சிறு நகைகளை அடகு வைத்து அந்த தட்கல் விண்ணப்பத்திற்கு காத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குத்தான் தெரியும் தட்கல் மின் மோட்டாரினுடைய பெருமை, விவசாயிகளுக்குத்தான் தெரியும். அந்த 67,000 பேருக்கு வழங்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று ஏராளமான விவசாயிகள் எனக்கு தொடர்புகொண்டு சொல்லியிருக்கிறார்கள். நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், திருநெல்வேலிக்கு வேளாண் ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்த போதும் விவசாயிகள் அதை வலியுறுத்தினார்கள்; நானும் அதை வலியுறுத்தி அமைச்சருக்கு முன்னால் பேசினேன் என்பதை நினைவூட்டுகிறேன். அதற்கான வாய்ப்பினை நீங்கள் உருவாக்கித்தர வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

### திராவிட மாடல் ஆட்சியில் 11 ஆயிரம் பேருந்துகள்!

போக்குவரத்து வசதி என்பது அந்த infrastructure மிகவும் அவசியமான ஒன்று. திராவிட மாடல் ஆட்சியில், 11,000 பேருந்துகளுக்கு இலக்கு நிர்ணயித்து tender விட்டு 9,000 பேருந்துகளை ஐந்தாண்டுகளில் இயக்கி முடித்துவிட்டார்கள். 2,000 பேருந்துகள் கட்டுமானப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சில மாதங்களிலே இயக்கக்கூடும். அந்தப் பேருந்துகள் அவ்வாறு இருந்தால், உங்களது ஆட்சியில் ஓராண்டு காலத்திற்கு எத்தனைப் பேருந்துகளை உங்கள் நிதியில் இந்த ஆண்டுக்கான நிதியில் இயக்கப் போகிறீர்கள் என்கிற தகவல் நிதிநிலை அறிக்கையில் இல்லை. ஒரு தகவல் இருக்கிறது. 1000 மின் பேருந்துகளை தனியார் ஒத்துழைப்போடு சென்னை பட்டினத்தில் இயக்குவோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள், அதை வரவேற்கிறேன். ஆனால், எட்டு மண்டலங்களாக இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்திற்கு இந்த ஆண்டில் தமிழக வெற்றிக் கழக அரசின் பங்களிப்பு என்ன என்கிற செய்தி நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிறைவாக, நமது நீர் வளத்துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு சிறப்பு என்னவென்றால், நாங்கள் தெற்கு திருநெல்வேலி பகுதி, தென்காசி பகுதியிலிருந்து உங்களைப் பார்க்கின்றோம். நாங்கள் சென்னை தமிழை பேச வைத்து இரசிப்பதுண்டு. கொங்கு நாட்டுத் தமிழை நண்பர்களை பேச வைத்து இரசிப்பதுண்டு. நீங்கள் கட்சிப் பிரச்சார மேடையில் பேசியவற்றை நான் கேலியாகவோ, கிண்டலாகவோ சொல்கிற இயல்புடையவன் அல்ல. உங்களுடைய அந்தச் சென்னை தமிழை சில நேரம் நாங்கள் இரசித்துப் பார்ப்பதுண்டு. ஆனால், பக்கம்-88 நிதி நிலை அறிக்கையில் நீர் வளத்துறையின் செய்திகள் மிகப்பெரிய தவறாக இடம்பெற்றிருக்கின்றன. அதில், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்றால், நதிகளை இணைக்கின்ற அந்தத் திட்டத்தை கடந்த கால அரசுகள் மிகவும் தாமதப்படுத்தியதால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நதிகளை இணைப்பதற்கு தமிழ்நாடு அரசு என்னென்ன திட்டங்களை வைத்திருக்கின்றன என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; தமிழ்நாட்டில் 32 முக்கிய நதிகள் இருக்கின்றன, அதில் மூன்று நதிகள்தான் இதுவரை இணைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

அந்த 3 நதிகள் எவை என்றால், நான் தண்ணீர் குடித்து வளர்கின்ற தாமிரபரணி நதி, கருமேனியாறு, நம்பியாறு ஆகியவை இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று நதிகளையும் இணைத்த புத்துலகச் சிற்பி கலைஞர் என்பதை இங்கே பணிவோடு நினைவுபடுத்து கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம், பிப்ரவரி 2026-ல் திராவிட மாடல் அரசின் முதல்வர் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் நிறைவு பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அது, சுமார் 1,060 கோடி ரூபாய் திட்டம். ஆனால், நீர்வளத் துறையின் அமைச்சரான நீங்கள், காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் எங்கள் ஆட்சியில் செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கை, பக்கம் 88-ல் தெரிவித்துள்ளீர்கள். ஆனால், இந்தத் திட்டம் 2014 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒருபுறத்தில் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு தேவையான நிலங்களும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன என்பதை நான் கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

### 3 நதிகள் இணைப்புத் திட்டம்!

இந்நிலையில், நீங்கள் 150 கோடி ரூபாய் நிதியை மட்டும் ஒதுக்கிவிட்டு, நமது நதிகளை விரைவாக இணைக்கப்போகிறோம் என்று சொல்வது, இந்த காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தில் சாத்தியமில்லை. ஏனென்றால், 3 கட்டங்களாக நிறைவேற்றப்பட வேண்டிய இந்தத் திட்டத்தின் மொத்த தூரம் 262 கிலோ மீட்டர். அதற்கு இன்றைய மதிப்பீட்டில் தேவைப்படுகின்ற நிதி சுமார் 16,000 கோடி ரூபாய். அதில் பாதி தெற்கு வெள்ளாறு வரை நிறைவேற்றலாம் என்று சொன்னால்கூட, அதற்குத் தேவைப்படும் நிதி 7,000 கோடி ரூபாய். நீங்கள் ஒதுக்கியிருப்பதோ 150 கோடி ரூபாய் தான். அதிலும், எதிர்க்கட்சிகளாக இருக்கின்ற முந்தைய அரசுகள் ஒழுங்காக உரிய நேரத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றவில்லை; நாங்கள் நிறைவேற்றுவதற்கு இந்தத் திட்டத்திற்கு இவ்வளவு நிதியை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வது பொருத்தமற்ற வாதமாக இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு நீங்கள் ஒதுக்கியுள்ள நிதி அடிப்படையில் பார்த்தால், அதை நிறைவேற்றுவதற்கு 100 ஆண்டுகள் ஆகும் என்பதைக் கவனத்திற்கொண்டு, நீங்கள் இதுபோன்ற குறிப்புகளைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

உங்கள் பட்ஜெட் புத்தகத்தில் இருக்கிற வாசகங்கள், நீர்வளத் துறையின் திட்டமிடல் துறையின்மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற அந்த பணிகளின் அடிப்படையில்தான் நான் பேசுகிறேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியின் நீர்த் திட்டங்களுக்காக, 10, 15 ஆண்டுகளாக நீர்வளத் துறையின் திட்டமிடல் துறைக்கு நான் ரெகுலராக செல்கிறவன். அதிலுள்ள செய்திகளைத்தான் உங்கள் பட்ஜெட் விவரங்களுடன் இணைத்துச் சொல்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால், 2014-ல், 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அத்திட்டத்திற்கு ஏறக்குறைய 800 கோடி ரூபாய்க்குமேல் நிதி வழங்கப்பட்டு, 550 கோடி ரூபாயில் நில எடுப்பும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், நீங்கள் உங்கள் நிதிநிலை அறிக்கை, பக்கம் 88-ல் புதிதாக இந்தத் திட்டத்தை செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்வதைத்தான் நான் கோடிட்டுக் காட்டுகிறேனே தவிர, வேறொன்றுமில்லை.

ஆகவே, வாசகங்களைப் பயன்படுத்துகின்ற போது, நதிகளை இணைப்பது நாளையே சாத்தியம் இல்லை. 40 ஆண்டுகளுக்கு முன்பு ஐயா குமரி அனந்தன் அவர்கள் 'கங்கை இங்கே வர வேண்டும், குமரிக் கடலைத் தொட வேண்டும்' என்றார். வாய்ப்பில்லை. முதலமைச்சர் அவர்கள் கோதாவரி-காவிரி-வைகை இணைப்பு வேண்டும் என்கிறார்கள். திராவிட மண்டலத்திற்குட்பட்ட நதிகள் இணைக்கப்பட வேண்டுமென்பது சரிதான். அதை நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம். ஆனால், நமது சொந்த நாட்டில் இருக்கின்ற நதிகள் நமது கன்னியாகுமரியைச் சேர்ந்த சகோதரி அவர்கள் தெரிவித்தது போன்று, நமது சொந்த நாட்டில் உள்ள நதிகள் இணைப்புக்கான முயற்சிகளில், முதல் முயற்சியே கலைஞர் அரசு செய்தது. தலைவர் ஸ்டாலின் அரசு அதை நிறைவேற்றியது என்பதை நான் பதிவு செய்கின்றேன். அவ்வளவுதான். ஐயா, நீங்கள் நன்றாகப் பாட்டுப் பாடினீர்கள். இரண்டு நிமிடத்தில் என் உரையை முடித்துக்கொள்கிறேன். எங்கள் தென்காசி மாவட்டத்தில். . .

கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தமட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருக்கின்ற தொகுதி. கடையநல்லூர், சாம்பவர் வடகரை மற்றும் ஆய்குடி ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் திட்டம். . .

கடையநல்லூர் தொகுதியில், கடையநல்லூர் சாம்பவர் வடகரை, சுரண்டை, ஆய்க்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். பாப்பான் கால்வாய் சீரமைப்பு, சீவலங்காய் சீரமைப்பை செய்து தர வேண்டும். செங்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகம் சீரமைப்பு செய்து தர வேண்டும். மிக முக்கியமாக முதலமைச்சர் அவர்களுடைய துறையில் AMRUT திட்டத்தில் வேலைத் தொடங்கப்பட்டு, அந்த வேலை நிறைவு பெறாமல் இருக்கிறது. வடகரை, அச்சன் புதூர், பண்பொழி, S.புதூர் பேரூராட்சிகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். மிகப் பெரிய முக்கியமான செய்தி, ஐயா அவர்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன். சிறுபான்மையினருக்கு மையவாடி என்று சொல்கிற, அமரர்களை அடக்கம் செய்கிற பகுதி பெருமளவு நெருக்கடியைச் சந்திக்கிறது. நம்முடைய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, முதலமைச்சர் அவர்களின் முயற்சியோடு, அரசின் முயற்சியோடு மையவாடிக்கு போதிய இடம் ஒதுக்கித் தந்து கடையநல்லூரில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பண்பொழி திருமலை குமாரசுவாமி திருக்கோயில், பிரசித்தி பெற்றக் கோவில்.

கன்னியாகுமரி மாவட்ட உறுப்பினர் அவர்கள் கூறினார்கள், நாங்கள் பேசிவிட்டால் தொகுதியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் பேசிவிட்டோம் என்று நினைப்பார்கள்.

### அணைகளை தூர்வார வேண்டும்!

குண்டாறு, அடவிநயினார், கருப்பா நதி அணைகளைத் தூர்வார வேண்டும். எங்கள் தென்காசி மாவட்டம், மாவட்டமாக அறிவிக்கப்பட்டு 6 வருடங்கள்தான் ஆகின்றன. அந்த ஆறு வயது குழந்தையை கண்ணைப் போல் காப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டும். நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் அங்கு பொறுப்பு அமைச்சராக இருக்கிறார். தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் விரைவில் திறக்கவும், செண்பகவல்லி அணை சீரமைப்பு மற்றும் நெய்யாறு இடதுகரைக் கால்வாய் குறித்துச் சொன்னார்கள் குமரி மாவட்டத்தினர். இந்த இரண்டிற்கும் நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை கேரளாவிற்கு அனுப்புங்கள். இவர்கள் கட்சியும் அங்கு உள்ள கட்சியும் ஒரே கட்சி என்பதால் அதைப் பெற்றுத் தருவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

செண்பகவல்லி அணை சீரடைந்தால், தமிழ்நாட்டில் மோசமான வறட்சி பாதிக்கின்ற எங்கள் பகுதிகளான, சங்கரன்கோவில், சிவகிரி, வெம்பக்கோட்டை, கோவில்பட்டி, விளாத்திகுளம் பகுதி வளம் பெறும். அதேபோன்று தாமிரபரணி ஆற்றில் எஞ்சியிருக்கின்ற வெள்ள நீரை pumping மூலம் எவ்வாறு அவிநாசி-அத்திக்கடவு திட்டம் நிறைவேற்றப்பட்டதோ, எடப்பாடியில் எவ்வாறு அந்தத் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறதோ, அதேபோன்று தாமிரபரணி ஆற்றிலிருந்து மானூர், மேலநீலிதநல்லூர், குருவிக்குளம் ஒன்றியப் பகுதிகளுக்கு ஒரு pumping மூலம் தாமிரபரணியின் எஞ்சிய வெள்ள நீரை பயன்படுத்துவதற்கான திட்டம் வேண்டும்.

ஊத்துமலை-இரட்டைக்குளம் கால்வாய்த் திட்டம் செய்து தர வேண்டும். வன விலங்குகளின் தொல்லையிலிருந்து எங்கள் மாவட்டத்தை மட்டும் அல்ல, தமிழ்நாட்டையும் காப்பதற்கு தனித் திட்டத்தை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டு, எவருடைய மனதையும் புண்படுத்துகிற இயல்போ, நோக்கமோ இல்லை. அனைத்தையும் சுட்டிக்காட்டு வதைத்தான் எனது கடமையாகக் கருதி சுட்டிக் காட்டியிருக்கிறேன் என்று சொல்லி, எனது கன்னிப் பேச்சை நிகழ்த்துவதற்கு பெருந்துணையாக இருந்த அவைத் தலைவர் அவர்களுக்கும், அவைக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்,

இவ்வாறு கடையநல்லூர் தி.மு. இராஜேந்திரன் பேசினார்.